*සියලු ම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது*
*All Rights Reserved*

# රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව
## அரசகரும மொழிகள் திணைக்களம்
## Department of Official Languages

**රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුවෙහි II ශ්‍රේණියේ භාෂා පරිවර්තක (සිංහල/ඉංග්‍රීසි) , (දෙමළ/ඉංග්‍රීසි) , (සිංහල/දෙමළ) තනතුරු සඳහා බඳවා ගැනීමේ විවෘත/සීමිත තරග විභාගය - 2016**

**அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்), (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2016**

**Open/Limited Competitive Examination for Recruitment to the Posts of Translator (Sinhala/English), (Tamil/English) and (Sinhala/Tamil) in the Department of Official Languages – 2016**

***පරිවර්තනය / மொழிபெயர்ப்பு / Translation***

*කාලය: පැය 3* — **මුළු ලකුණු 100**
நேரம் ***: 3 மணித்தியாலம்*** — **மொத்த புள்ளிகள் 100**
***Duration: 3 Hours*** — **Total Marks: 100**

*විභාග අංකය*
*சுட்டெண்*
***Index No:……………………………..***

සියලු ම ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න
***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்***
**Answer all questions**

---

**கீழ் காணும் பந்திகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும்.**

**1.** இலங்கை, 2016 ஆம் ஆண்டில் தகவல்களை அறியும் உரிமைபற்றிய சட்டத்தை அங்கீகரித்தாலும், இத்தகைய சட்டம் ஒன்றை அறிமுகம் செய்வது பற்றிய கலந்துரையாடல்கள் 1994 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. 2004 இன் ஆரம்ப நாட்களில் ‘‘தகவல்களை அறியும் சுதந்திரம்’’ என்னும் தலைப்பில் இத்தகைய சட்டவரைவொன்று அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. அதற்கு அண்மித்த காலத்தில் அன்றைய அரசாங்கம் கலைக்கப்பட்டமையால் மேற்படி சட்டவரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

அதன் பின்னர், பல்வேறு சந்தர்ப்பங்களில் தகவல்களை அறியும் சட்டமொன்றை அறிமுகப்படுத்தும் முயற்சிகள் நிலவின. இத்தகைய ஒரு சட்டத்தை சமர்ப்பிக்கும்

பாராட்டுக்குரிய ஓர் முயற்சி 2010 மற்றும் 2011 ஆகிய காலகட்டத்தில் இடம்பெற்றது. அன்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றிய திரு. கரு ஜயசூரிய அவர்கள் இத்தகைய சட்டமொன்றிற்கான தேவையை வலியுறுத்தி இருந்தார். தனிப்பட்ட பாராளுமன்ற

உறுப்பினரின் பிரேரணையாக இரண்டு சந்தர்ப்பங்களில் தகவல் அறியும் உரிமைபற்றிய வரைவுச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தாலும் அம்முயற்சி பயனற்றுப் போய்விட்டது.

2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலின்போது எதிர்க்கட்சியினரின் பொது வேட்பாளரின் 100 நாள் வேலைத்திட்டத்.தில் இச்சட்டத்தை அங்கீகரிக்கக் கருதினாலும், மேற்படி 100 நாட்களுக்குள் அச்சட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்க முடியவில்லை. ஆனால், பொதுநிர்வாக, ஊடக மற்றும் நீதித்துறையாகிய அமைச்சுக்களைக் கூட்டிணைத்து ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு அரச உத்தியோகத்தர்கள் சிவில் மற்றும் மனிதஉரிமைகள் செயற்பாட்டாளர்கள், தொழில்சார் நிபுணர்கள் உள்ளடக்கப்பட்ட சட்டவரைவு சபையொன்று நியமிக்கப்பட்டதோடு அதன் தவிசாளராக கலாநிதி சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன நியமிக்கப்பட்டார்.

இறுதியில், வரைவு 2015 டிசெம்பர் 02 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. இது இலங்கையர்களுக்குப் புதிய சட்டமாகும். ஆனால் 1995 முதல் இச்சட்டத்தின் அவசியத்தை தொழில்வாண்மையாளர்களும், ஊடக அமைப்புக்களும், சிவில் சமூக அமைப்புக்களும் தெரிவித்த கருத்துக்கள ஆர்வத்தோடு ஒன்றிணைக்கப்பட்டன. அதேசமயம், மாகாண சபைகளும் இச்சட்டமூலத்திற்கு திருத்தங்களைக் கொண்டுவந்தது இச் செயற்பாட்டின்போது காணக்கூடிய விசேட அம்சமாகும்.

2016 மார்ச் 23 ஆந் திகதி முதல் முறையாக, இச்சட்டவரைவு கௌரவ ஊடக அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, 23, 24 ஆந் திகதிகளில் விவாதிக்கப்பட்டாலும் பின்னர் இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

**(35 புள்ளிகள்)**

**2.** அரசாங்க சேவையின் பதவி ஒவ்வொன்றுக்கும், அத்தகைய பதவி ஒன்று ஏதேனும் தரத்திற்கு அல்லது சேவைக்கு உரித்தானதாக இருக்குமாயின் ஒவ்வொரு தரத்திற்கும் அல்லது சேவைக்கும் பதவிக்கான சம்பள அளவுத்திட்டம், தேவையான தகைமைகள், வயதெல்லைகள் அத்துடன் உரிய பிற விபரங்கள் திட்டவட்டமாக உள்ளடக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்களத்தினால் ஆட்சேர்ப்புத் திட்டம் வரையப்பட்டு அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

அரசாங்க சேவையின் பதவியொன்று சார்பில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டம் எதிர்காலத்தில் செய்யப்படக்கூடிய திருத்தங்களுக்கு உட்பட்டு தொடர்ந்தும் வலுவிலிருக்கும். ஆட்சேர்ப்புக்கான வரைதிட்டம் இரண்டாம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சேவைக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டம் அந்தச் சேவைக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ளடக்கப்படலாம் என்பதோடு, இந்த சேவை பிரமாணக் குறிப்பானது

அமைச்சரவையின் அதிகாரத்தின்கீழ் வெளியிடப்படுதல் வேண்டும். உதாரணமாக இலங்கை நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பு. ஆட்சேர்ப்பு வரைதிட்டம் அனைத்தும் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் மூன்று பிரதிகளில் தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அமைச்சுச் செயலாளருடனும் உசாவுதல் மேற்கொண்டு செய்யக்கூடிய திருத்தங்களுக்கு அமைவாக அத்திட்டம் தாபனப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்படும். சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கும், தாபனப் பணிப்பாளருக்குமிடையில் கருத்து வேற்றுமை இருந்தால் அவ்விடயம் திட்டத்தினைத் தயாரித்த அமைச்சின் செயலாளரினால் விதிப்பொன்றுக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆட்சேர்ப்புத் திட்டத்தில் பெரிய மாற்றமொன்றைச் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் உத்தேச மாற்றத்திற்கு தாம் உடன்பட்டாலும்கூட இந்தத் திட்டத்தை அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கு தாபனப் பணிப்பாளர் செயலாளருக்கு முன்மொழிவார்.

சம்பந்தப்பட்ட செயலாளருக்கும், தாபனப் பணிப்பாளருக்குமிடையில் சிற்சில திருத்தங்கள்பற்றி உடன்பாடு ஏற்பட்டிருப்பின் அல்லது சிற்சில திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அமைச்சரவை கட்டளையிட்டு இருப்பின், அத்தகைய திருத்தங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தினுள் உட்சேர்க்கப்பட்டு அவ்ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இறுதி அங்கீகாரத் திட்டம் திணைக்களத் தலைவரினால் சான்றுதிப்படுத்தப்படல் வேண்டும். சான்றுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இரண்டு பிரதிகள் தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஆட்சேர்ப்புத் திட்டம் ஒன்றில் விதிக்கப்பட்டுள்ள் தகைமைகளை உடையவர்கள் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் பற்றாக்குறையாக உள்ளமை போன்ற தற்காலிகமாக பிரச்சினைகளைத் தீர்க்கின்ற ஒரு வழியாக ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மாற்றம் செய்யப்படலாகாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் குறித்த தகைமைகளற்ற உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக ஆட்சேர்ப்புத் திட்டத்தில் இருந்து வேறுபட்டுச் செல்வதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தாபனப் பணிப்பாளரின் சம்மதத்தைப் பெற வேண்டும்.

**(35 புள்ளிகள்)**

**3.** கட்புலக் கலையின் வலுவான பாடத்துறையான சித்திரக் கலை, சகல பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுகின்ற ஒரு பாடமாகும். எனவே, சித்திரபாட ஆசிரியருக்கு சமூக ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்ற இடையீட்டாளர் வகிபாகத்தை நிறைவேற்ற முடியும். எவ்வாறாயினும், அநேகமான சித்திர பாட ஆசிரியர்கள் பரீட்சை நோக்கத்திலிருந்து விலகியவர்களாகவும், இந்த

சமூக இடையீட்டாளர் வகிபாகத்திலிருந்து அன்னியப்பட்டும் இருக்கின்றமை எமது அனுபவத்தின் படிப்பினையாகும்.

குறிப்பாக, மூன்று தசாப்பதங்களைக் கடந்த யுத்த மனோநிலையுடனான சமுதாய சூழமைவில் சித்திரபாட ஆசிரியர்களுக்கும் பாரிய பொறுப்பு உண்டு. நீண்டகாலமாக இன முரண்பாடுகள் காரணமாகவும் யுத்தத்தாலும் துவண்டுபோன வடக்கு கிழக்குவாழ் மக்களின் பொது கலை நடவடிக்கைகள் மீதான ஈடுபாட்டை தீவிரப்படுத்துவதற்கும், நீண்டகாலமாக அவர்களின் வாழ்க்கையுடன் நெருங்காதிருந்த அழகியலை கலையுடனான ஊடாட்டத்தினால் கொண்டு சேர்ப்பதற்குமான ஒரு வேலைத்திட்டத்துடன், ''விபவி அழகியல் கலை'' கற்கைப் பீடம், பிறர் பற்றிய சந்தேகத்துடன் இருப்பதை விட கூருணர்வு மற்றும் கலாசார பன்முகத் தன்மையை மதிக்கின்ற ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் பணியில், மாணவர்களிடையே மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதில் நேரடியாக செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியரை ஆண் ∴ பெண் ''சமூக மாற்றுக் காரணி'' எனக் கருதியும், ''சமகால கலை ஆசான்களின் வகிபங்கை'' எமது நாட்டின் சூழ்நிலைமைக்கு ஏற்ப தயார்படுத்துவதை முதன்மையாகக் கொண்டும் ஆசிரியர்களுக்கான சில செயலமர்வுகளை 2009 மற்றும் 2010 ஆண்டில் திருகோணமலை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அங்குள்ள சித்திர பாட ஆசிரியர்களுக்காக நடாத்தியது.

சிங்களம், தமிழ், முஸ்லீம் பாடசாலைகளில் சித்திர பாடத்தைக் கற்பிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த ஆசிரியர்கள் இச்செயலமர்வுக்கென அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் சித்திரம் அல்லது கட்புலக் கலைத் துறையில் கற்றுத்தேர்ந்தவர்கள் அல்லர். அழைக்கப்பட்டிருந்த ஆசிரியர்களில் சிலர் பிற பாடங்களைக் கற்பிப்பவர்களாக இருந்ததுடன், சித்திர பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாத நிலையில், சிறு பராயத்தில் தங்கள் ஆற்றலையும் தமக்குள்ள பிறப்பாற்றலையும் கொண்டு தம்மால் முடிந்த வரையில் சித்திர பாடத்தைக் கற்பித்து வருகின்றனர். இன்னும் சிலர் ஆசிரியர் பயிற்சி பெற்றிருப்பினும், சித்திர பாடத்தில் சிறப்புப் பயிற்சி ஏதும் பெறாதவர்களாவர். இன்னும் சிலர் தங்களுடைய சுய அறிமுகத்தின்போது, ''தாங்கள் கல்வியற் கல்லூரிகளில் சித்திர பாட ஆசிரியர்களாக பயின்று வெளியேறி உள்ளபோதும், கல்வியியற் கல்லூரியில் விசேடமாக எதையும் கற்கவில்லையென்பதை உணர முடிகின்றது'' எனத் தெரிவித்தனர். வேறு சிலர் சித்திரம் வரைதலில் உள்ள விருப்பம் காரணமாக சுய விருப்பத்தின் பேரில் சித்திர பாடத்தைக் கற்பிக்க முன்வந்ததாகத் தெரிவித்தனர்.

செயலமர்வில் பங்கேற்ற அனைவரும் சித்திரக் கலை விடயத்தில் பிள்ளையின் மனவோட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை விளங்கப்படுத்துவதைவிட, தாங்கள் அறிந்திருந்த அல்லது நியமமாக அல்லது பாடத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றை மாத்திரம் கற்பிப்பவர்களாக இருப்பதை பொதுவாக அவதானிக்க முடிந்தது.

**(30 புள்ளிகள்)**